செ.வெ.எண் : 31/ ஆகஸ்ட் நாள் : 23.08.2021

# இராமநாதபுரம் மாவட்டம்

# பசுமை இராமேஸ்வரம் திட்டத்தின் கீழ் புனித தீர்த்தங்களை புனரமைக்கும் பணிகள் தொடர்பாக மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ஜெ.யு.சந்திரகலா,இ.ஆ.ப., அவர்கள் நேரில் ஆய்வு

இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட பகுதிகளில் இன்று (23.08.2021) மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ஜெ.யு.சந்திரகலா இ.ஆ.ப., அவர்கள், பசுமை இராமேஸ்வரம் திட்டத்தின் கீழ் புனித தீர்த்தங்களை புனரமைக்கும் பணிகள் தொடர்பாக நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டர்கள்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள இராமேஸ்வரம் அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோவில் இந்திய அளவில் முக்கிய புனித தளமாக விளங்கி வருகிறது. இத்திருக்கோவிலுக்கு தேசிய அளவிலும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் இலட்சக்கணக்கான பக்தர்கள், யாத்ரிகர்கள், சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்றனர். தொன்றுதொட்டு இத்திருக்கோவிலுக்கு வருகைதரும் பக்தர்கள் வழியில் உள்ள 108 புனித தீர்த்தங்களில் புனித நீராடியும், திருக்கோவில் வளாகத்தினுள் 22 உள்ள புனித தீர்த்தங்களில் நீராடியும் சுவாமி தரிசனம் செய்து வந்தனர். நாளடைவில் கோவிலின் வெளியே உள்ள தீர்த்தங்களில் பெரும்பான்மையான தீர்த்தங்கள் பயன்பாட்டில் இல்லாமலும், மராமத்து செய்யாமலும் தூர்ந்து போகும் சூழ்நிலை ஏற்பட்டது. இந்நிலையில், விவேகானந்த கேந்திரா என்ற தன்னார்வ தொண்டு நிறுவனம் "பசுமை இராமேஸ்வரம்" திட்டத்தின் கீழ் புனித தீர்த்தங்களை மீட்டு புனரமைக்கும் பணிகளில் மாவட்ட நிர்வாகத்துடன் ஒருங்கிணைந்து செயல்பட்டு வருகிறது.

அதன்படி, மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர். ஜெ.யு.சந்திரகலா,இ.ஆ.ப., அவர்கள், மண்டபம் பகுதியில் உள்ள "பரமேஸ்வர தீர்த்தம்", பாம்பன் பகுதியில் உள்ள "கபி தீர்த்தம்", தங்கச்சிமடம் பகுதியில் உள்ள "மங்கல தீர்த்தம்" ஆகிய தீர்த்தங்களுக்கு நேரில் சென்று தீர்த்தம் புனரமைப்பு மேற்கொண்டு பயன்பாட்டிக்கு கொண்டு வருதல் குறித்து நேரில் ஆய்வு மேற்கொண்டார்கள். மேலும், திருக்கோவில் வெளியே உள்ள தீர்த்தங்கள் குறித்து அலுவலர்களிடம் கேட்டறிந்தார்கள். புனித தீர்த்தங்களை கண்டறிந்து முறையே மராமத்து மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்கள்.

தொடர்ந்து, தங்கச்சிமடம் ஊராட்சியில் ஊரக வளர்ச்சித் துறையின் கீழ் அமைக்கபட்டுள்ள திடக்கழிவு மேலாண்மை மையத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நேரில் ஆய்வு மேற்கொண்டு அலுவலர்களிடம் கேட்டறிந்தார்கள். திடக்கழிவு மேலாண்மை மையத்தின் பணிகள் 90 சதவிதம் நிறைவு பெற்றுள்ளதாகவும், இதன் மூலம் 20 டன் அளவிற்கு கழிவுகளை கையாள முடியும் எனவும் அலுவலர்கள் தெரிவித்தனர். பணிகளை விரைந்து முடித்து காலதாமதமின்றி பயன்பாடடிற்கு கொண்டு வர உரிய நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் உத்தரவிட்டார்.

இந்த ஆய்வின் போது, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திரு.கே.ஜே.பிரவீன் குமார், இ.ஆ.ப., விவேகானந்தா கேந்திர தொண்டு நிறுவன பிரதிநிதி திருமதி.சரஸ்வதி, வட்டார வளர்ச்சி அலுவலர் திருமதி .செந்தாமரைச்செல்வி உட்பட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**